சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 163/2010

பெயர் திரு. கோதண்டராமன் **நாள்.** 27.03.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் பிறந்தது பவுஞ்சூர் கிராமம். தற்பொழுது சென்னையில் வசித்து வருகிறேன். நான் படிப்பதற்காக சென்னை சென்று 1956 முதல் அங்கேயே தங்கிவிட்டேன். நான் பொறியியல் பட்டம் பெற்றுள்ளேன். எனக்கு வழக்குப் பற்றிய விவரங்கள் தெரியும். 1ம் வாதி நீதிமன்றத்திற்கு வெளியே நடக்க முடியாத காரணத்தினால் வாகனத்தில் உள்ளார். வாதிகள் வழக்கை நடத்துவதற்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை. வழக்குச் சொத்து புவனேஸ்வரிக்கு உரிமையானது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1ன் அசல் தாக்கல் செய்யவில்லை. அசல் எங்குள்ளது என்று வழக்கில் சொல்லவில்லை. வா.த.சா.ஆ.1ல் எனக்கு சொந்தமான நிலம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சொத்து என் தாத்தாவிடம் இருந்து 1966 தேதியிட்ட பரிவர்த்தனை ஆவணம் மூலம் எனக்கு கிடைத்தது. அந்த ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். என் தாத்தா பவுஞ்சூர் கிராமத்தைச் சேர்ந்தவர். பரிவர்த்தனை ஆவணத்தைப் பார்த்தால் என் தாத்தாவிற்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்று தெரிய வரும் என்றால் சரிதான். அவருக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற எனக்கு தெரியாது. அவர் வாங்கியிருப்பார்.

2) வழக்குச் சொத்திற்கு நான் வில்லங்கம் போட்டு பார்த்துள்ளேன். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வில்லங்கம் போட்டுப் பார்த்தால் என் தாத்தாவிற்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்று தெரிய வரும் என்றால் சரிதான்.

வா.த.சா.ஆ.1ல் எனக்கும், என் தாத்தாவிற்கும் சொத்து எவ்வாறு கிடைத்தது என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ. 2ன் அசல் உள்ளது. அதை வைத்து கடன் வாங்கியுள்ளேன். வா.த.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களை அடைமான வைத்ததாக கூறுவது வழக்கிற்கு முன்பா, பின்பா என்று ஞாபகம் இல்லை. வாதிகளிடம் வழக்கிற்கு முன்பு அடைமானம் வைத்தார்களா அல்லது வழக்கிற்கு பின்பா என்று நான் கேட்கவில்லை. அது பதிவு செய்யப்படாத ஆவணம். அதை வைத்து ரூ.20,00,000/- கடன் பெற்றுள்ளேன். அந்த அடைமானத்தை அம்பத்தூரில் உள்ள கிரீஷ்குமார் என்பவரிடம் அடைமானம் வைத்துள்ளேன். அவரிடம் தான் அசல் ஆவணம் உள்ளது என்றால் சரிதான். ஆவணங்களை கொடுத்து அப்படியே கடன் வாங்கிவிட்டேன். மேற்கண்ட அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் நகல் தாக்கல் செய்யலாம், அசல் தாக்கல் செய்தால் நீதிமன்றத்தில் தொலைந்து போகலாம்.

3) புவனேஸ்வரியும், 1ம் வாதியும் சகோதரிகள். 1ம் வாதி மூத்த சகோதரி. வா.த.சா.ஆ.5 ல் கண்ட 2 மற்றும் 3 வாதிகள் புவனேஸ்வரியின் மகள்கள் ஆவர். வா.த.சா.ஆ.5ல் வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணம் என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.5 கமலக்கண்ணன் மற்றும் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி மற்றும் சகாதேவன் ஆகியோருக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.10ல் முறையாக விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.10ல் கண்ட சொத்திற்கு சகாதேவன் உரிமை ஏதும் கோரவில்லை. 1ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் உரிமை கோருவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் என்னிடம் வந்து உரிமை உள்ளதாகக் கூறினார். அதற்காக நான் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதியின் தாயார் வீரம்மாள் என்றால் எனக்கு தெரியாது. அவர் எப்பொழுது இறந்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. வீரம்மாள் மீது நான் வழக்கு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண். 47 மொத்த

விஸ்தீரணம் 57 ஏக்கர் 20 சென்ட் ஆகும். அது என் தாத்தா தாஸ் என்கிற வீராசாமி பெயரில் உள்ளது. அவர் பெயரில் பட்டா உள்ளதா என்று எனக்கு தெரியாது. வழக்குச் சொத்திற்க பழைய 'அ' பதிவேடு உட்பட வருவாய் ஆவணங்களை நான் பார்க்கவில்லை. 'அ' பதிவேட்டில் 374 பட்டா உள்ளது பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டா ருக்மணியம்மாள், சுப்புராயன், பவுஞ்சூர் தாஸ் என்கிற வீராசாமி ஆகியோர் பெயரில் கூட்டாக உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

4) எங்கள் ஊரில் மொத்த இடமும் வரப்பு இல்லாமல் சமமாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். வழக்குச் சொத்து வங்காள விரிகுடாவிற்கு மேல் புறம் சமமாக உள்ளது என்றால் சரிதான். 374 பட்டா தனியாக என் தாத்தா பெயரில் எப்பொழுது வந்தது என்று எனக்கு தெரியாது. புல எண்.477 எப்பொழுது உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. இன்று வரை நான் அதை தெரிந்து கொள்ளவில்லை. சுப்புராயன் மற்றும் ருக்மணியம்மாள் பற்றி எனக்கு தெரியாது. அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும் எனக்கு தெரியாது. அவர்களை நான் பார்த்தது கிடையாது. வா.த.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்களுக்கு பிறகு தான் வாதிகள் பெயரில் பட்டா வந்தது என்றால் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ. 2 முதல் 4 ஆவணங்கள் எழுதிய பிறகு வாதிகள் பெயரில் பட்டா மாற்றப்பட்டது. அதற்கு நான்தான் மனு அளித்திருப்பேன். உட்பிரிவு செய்யப்ட்ட இடத்தைப் போய் பார்த்தால் தெரிய வரும் என்றால் சரிதான். வா.த.சா.ஆ. 2 முதல் 4 பிறகு அத்து பிரிக்கப்பட்டதா என்றால் அதற்கு முன்பே பிரிக்கப்பட்டது.

5) எந்த ஆவணத்தை வைத்து பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என்று கூறுகிறேன் என்றால் எங்கள் ஆவணத்தை வைத்து கூறுகிறேன். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்க்கவில்லை. பிரதிவாதிகளின் பதிலுரையை மறுத்து குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ள உரிமை ஆவணங்கள் மறுத்து முதல் விசாரணை

வாக்குமூலம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிதிவாதிகள் 3 ஏக்கர் 7 சென்ட் உரிமையாது என்பதை மறுத்து முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. வா.த.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்களை வைத்து தான் வழக்கின் 3 பட்டியல் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் ரூ.1,00,000/- இழப்பீடு எதற்காக கோரியுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எங்கள் சொத்தை கிரயம் செய்ய தடை செய்தனர். ஆனால் நாங்கள் அந்த ரூ.1,00,000/- இழப்பீட்டைக் கேட்கவில்லை. வழக்கிற்கு முன்பு வழக்கு அறிவிப்பு ஏதும் நான் அனுப்பவில்லை. வெளிகாட்டு ஏழுமலையை வைத்து வழக்கு சம்மந்தமாக பஞ்சாயத்து பேசினோம் என்றால் சரிதான். அப்பொழுது பிரதிவாதிகள் அவர்களுக்கு உரிமையான ஆவணங்களை காண்பித்தார்கள் என்றால் அவர்கள் எந்த ஆவணமும் காண்பிக்கவில்லை.

6) சுப்புராயன் தகப்பனார் மாணிக்கம் என்பவரைத் தெரியாது. சுப்புராயனின் சகோதரர் துரைசாமி பற்றியும் எனக்கு தெரியாது. துரைசாமியின் மகள்தான் ருக்மணி என்றால் எனக்கு தெரியாது. அவரின் கணவர் பெகயர் தேவராஜ் என்றால் எனக்கு தெரியாது. அவர்கள் 19.4.1945 ல் திரிபுரசுந்தரி என்பவருடன் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. திரிபுரசுந்தரியின் தாயார் தான் ருக்மணி என்றால் எனக்கு தெரியாது. 20.08.1974ல் திரிபுரசுந்தரி 2ம் பிரதிவாதிக்கு 41 சென்ட் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சுப்புராயன் 14.4.1974ல் 3ம் பிரிதவாதிகயின் தகப்பனார் மைக்கேல் என்பவருக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. சுப்புராயனும், அவரது 2வது மனைவி வழியாக பிறந்த பார்த்தசாரதி மற்றும் துரை ஆகியோர் சேர்ந்து கிரயம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சுப்பபுராயனின் முதல் மனைவியின் மகன் மாணிக்கம், போரூரான் மனைவி வீரம்மாளுக்கு சுமார் 41 சென்ட்டை கிரயம செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.9 தேதியில் வீரம்மாள் உயிருடன் இருந்தார் என்றாலும், அதனை மறைத்து 1ம் பிரதிவாதியின்

பெயரில் மட்டும் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது வீரம்மாள் உயிருடன் இருந்தார் என்றாலும், அவரை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. பரமன்கேணியில் டில்லி என்பவர் வழக்குச் சொத்தில் சவுக்கு இருந்தது என்றால் அதை நாங்கள் தான் வைத்தோம். அந்த சவுக்கை வைத்து பாராமரித்தது யார் என்று டில்லி என்பவரை விசாரித்தால் தெரியும். 5 வருடங்களுக்கு முன்பு அங்கு சவுக்கு இருந்தது. அதை சுத்தம் செய்தது 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் இல்லை.

7) வழக்குச் சொத்திற்கான அடங்கல் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் சாகுபடி செய்தோம் என்பதற்கு அடங்கல் தாக்கல் செய்தால் தெரியும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் பிரதிவாதிகள் சவுக்கு வைக்கவில்லை என்று சொல்லவில்லை என்றால் அதற்கு அவசியம் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் சேர்ந்து 4ம் பிரதிவாதிக்கு அடைமானம் வைத்தார்கள் என்றால் சரிதான். அதனை பின்னர் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த காலத்தில் ஆறுமுகம் பெயரில் இருந்த அடைமானம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்கள் ஒப்புக் கொண்டு செயல்படுத்தியதாக முதல் விசாரணையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் எதிர் வழக்குரையை மறுத்து நான் சாட்சியம அளிக்கவில்லை என்பதால் அவர்களது வழக்கை நான் ஒப்புக் கொண்டேன் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.9 மற்றும் வா.த.சா.ஆ.10 தீர்ப்பு இவ்வழக்கின் பிதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் கிரயதாரர்களின் உரிமையை மறுத்து நாங்கள் எங்களுக்குள் ஒரு ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து சம்மந்தமாக காஞ்சிபுரம் காவல் சரகத்தில் நில அபகரிப்பு பிரிவில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். விசாரணையில் பிரதிவாதிகள் ஆவணங்கள் காண்பித்தார்கள் என்றால் அவர்கள் வரவே இல்லை. அந்த புகார் நான் வரவில்லை என்பதால்

பிரதிவாதிகளுக்குதான் உரிமை உள்ளது என்று கூறி முடித்து வைத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் காவல் மேல் அதிகாரிகளுக்கு மனு அளித்து மறுவிசாரணைக்கும் நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல.

8) பிரதிவாதிகளின் சொத்துக்களை அபகரிகக்ததான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு நான்தான் நஷ்ட ஈடு தரவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பெயரில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் 30 வருடங்களுக்கும் மேல் உள்ளதால் அவை உண்மையான ஆவணங்களாக கருதப்படும் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்கள் 1 முதல் 3 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் நான் எவ்வித உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல. மற்ற ஆவணங்களை வைத்து நான் தாவா சொத்தில் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை நான் வழக்குச் சொத்தில் அனுபவத்தில் உள்ளதாகக் கருத இயலாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.5 மற்றும் 6 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. 2 வருடங்களுக்கு முன்பு தடை செய்தார்கள். 2010க்கு முன்பு புகார் அளித்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. முதல் விசாரணையில் எல்லைகள் குறிப்பிடாமல் பிரதிவாதிகளின் ஆவணங்களில் உள்ளது என்று எவ்வாறு கூறுகிறேன் என்றால் அது எனக்கு தெரியாது.

மறுவிசாரணை – இல்லை.